# இணையம்வழி இன நல்லிணக்கம்

சிங்கப்பூரர்கள் இனி இணையம் வழி, இன நல்லிணக்கத்தைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

சிங்கப்பூரர்களின் இன ஒற்றுமையை வலியுறுத்தும் பொருட்டு தகவல்களைத் தரும் 'ஒன் பீப்பல்' இணையத்தளத்தில், ஒரு புதிய பகுதி நேற்று தொடங்கிவைக்கப்பட்டது.

சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன், அப்பகுதியில் காணப்படும் சிறப்பு அம்சங்களைக் கொண்ட வீடியோ பதிவின் வழி அதனை தொடங்கிவைத்தார்.

"இன நல்லிணக்கத்தைப் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இந்த பகுதி நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்" என்று அவர் தன் உரையில் கூறினார்.

மேலும், டாக்டர் விவியனின் முன்னிலையில், இந்த பகுதியை உருவாக்க கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் 'ஒன் பீப்பல்' இணையத் தளமும் தேசிய நூலக வாரியமும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் சிங்கப்பூரின் இன நல்லிணக்கத்தைப் பற்றி தேவையான தகவல்களை வழங்க வேண்டும் என்பதே இந்த பகுதியின் முக்கிய நோக்கமாகும்.

இந்த பகுதியில், பிள்ளைகளுக்கும் பதின்ம வயதினருக்கும் பெரியவர்களுக்கும் நூலகத்திலுள்ள பலவிதமான புத்தகங்களும் புத்தகப் பட்டியல்களும் வழிகாட்டிகளும் கிடைக்கும்.

அதோடு, இன நல்லிணக்கம் குறித்து பலரும் இப்பகுதிக்கு புகைப்படங்களை அனுப்பலாம்.

இத்தகவல்களை, www.onepeople.sg என்ற இணையத் தளத்தில் பெறலாம்.